இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 02-09-2024

# ஏ.ஜி.நூரானி விட்டுச் சென்றவை...

**நம் காலத்தில் வாழ்ந்த மாபெரும் சட்டமேதை ஏ.ஜி.நூரானி - 94 வயதில் கடந்த ஆக.29 ஆம் தேதி காலமானார். அவர் இடத்தில் வைத்து போற்றத்தக்க ஆளுமைகள் மிகமிகக் குறைவு என்ற வகையில் அவரது மறைவு ஈடுசெய்ய முடியாதது.**

மும்பையில் 1930 ஆம் ஆண்டு செப்டம்பர் 16 ஆம் நாள் பிறந்தவர் அப்துல் கஃபூர் மஜீத் நூரானி அவர்கள். மும்பை அரசு சட்டக் கல்லூரியில் சட்டம் படித்தார். மும்பை உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் ஆகிய வற்றில் புகழ்பெற்ற வழக்கறிஞராகப் பணியாற்றினார். இதுவல்ல அவரது பெருமை. தான் வாழ்ந்த காலத்தில் நீதிமன்றங்களுக்கு வெளியே, நீதிக்காகக் குரல் கொடுத்தார். முதுமையின் காரணமாக மூத்த வழக்கறிஞராகப் போற்றப்பட்டவரல்ல இவர். தந்து துணிச்சலின் காரணமாகப் போற்றப்படுபவர்.

**ராஜீவ் காந்தி கொலை வழக்கின் சதிகள் குறித்து விசாரித்த ஜெயின் ஆணையம், ஒட்டுமொத்த தமிழ்நாட்டையும், தமிழர்களையும், திராவிட இயக்கங்களையும் குற்றம் சாட்டியபோது 'இது எவ்வளவு மோசடித்தனமான குற்றச்சாட்டு' என்பதை கண்டித்து எழுதிய துணிச்சலுக்குச் சொந்தக்காரர் ஏ.ஜி.நூரானி.**

**அவசர நிலைச் சட்டம் 1975 ஆம் ஆண்டு அமல்படுத்தப்பட்டபோது அதனை மிகக் கடுமையாக எதிர்த்தார். இப்போது, 'டெல்லி சென்ட்ரல் விஸ்டா' சட்டம் கொண்டு வரப்பட்டபோதும் கடுமையாக எதிர்த்தார். காஷ்மீர் மக்களின் உரிமைக்காக தொடர்ந்து குரல் கொடுத்தார். காஷ்மீருக்கு அடிக்கடி பயணம் மேற்கொண்டார். தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் ஷேக் முகமது அப்துல்லா சிறையில் இருந்தபோது, 1962 ஆம் ஆண்டு அவரைச் சந்தித்து அவருக்கு ஆதரவு அளித்தார். 'காஷ்மீர் விவகாரம் - 1947 - 2012' என்ற நூலையும், 'சட்டப்பிரிவு 370 ஜம்மு காஷ்மீரின் அரசமைப்பு வரலாறு' ஆகிய நூல்களையும் எழுதினார்.**

தனது கருத்துகளைத் தொடர்ந்து எழுதி வந்தார். இந்தியன் எக்ஸ்பிரஸ், தி ஸ்டேட்ஸ்மேன், ஹிந்துஸ்தான் டைம்ஸ்,பிரண்ட்லைன், எகனாமிக் அண்ட் பொலிடிகல் வீக்லி,டைனிக் பாஸ்கர் ஆகிய நாளிதழ்களில் தொடர்ந்து எழுதி வந்தார். மாவீரன் பகத்சிங் வழக்கின் விசாரணை குறித்த இவரது நூல் மிகப் புகழ்பெற்றது ஆகும்.

ஏ.ஜி.நூரானியின் அறிவுக்கூர்மைக்கும் அஞ்சாமைக்கும் உதாரணங்கள், இந்தியாவில் அடிப்படைவாத அரசியலுக்கு எதிரான அவரது அழுத்தமான குரல் ஆகும். சாவர்க்கரும் இந்துத்துவமும், ஆர்.எஸ்.எஸும் பி.ஜே.பி.யும் – வேலைப் பிரிவினை, இஸ்லாமும் ஜிகாத்தும், ஆர்.எஸ்.எஸ். - இந்தியாவிற்கு ஓர் அச்சுறுத்தல் ஆகிய நான்கு நூல்களும் குறிப்பிடத்தக்கவை. இந்திய அரசியலுக்கு அவர் விட்டுச் சென்ற சொத்துக்கள் இவைதான்.

பா.ஜ.க. தனது வழிகாட்டியாகவும், மாபெரும் தலைவராகவும் கருதும் சாவர்க்கர், பிரிட்டிஷ் ஆட்சியிடம் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்தவர்தான் என்பதை ஆவணங்களின் மூலமாக மெய்ப்பித்தவர் நூரானி.

**"இந்திய தேசியவாதக் கோட்பாட்டுக்கு எதிராக சாவர்க்கர், அவரையே நிறுத்திப் போராடி இருக்கிறார். பிராந்திய தேசியவாதத்தை ஏற்றுக் கொள்ளாத அவர் பண்பாட்டு தேசியத்துக்காக வாதாடி இருக்கிறார். சாவர்க்கரை தேசிய நாயகனாக பி.ஜே.பி. முன்னிறுத்துவதற்குக் காரணம், இந்தியத் தேசியத்தின் அடையாளமாக உள்ள காந்தியை அந்த இடத்தில் இருந்து அகற்ற வேண்டும் என்பதற்காகத்தான். சாவர்க்கர் பலமுறை ஆங்கில அரசிடம் மன்னிப்புக் கேட்டிருந்தும், காங்கிரசுக்கு எதிராக ஆங்கில ஆட்சியாளர்களுடன் இணைந்து செயல்பட்டிருந்தும் அவரை தேசிய நாயகனாக முன்னிறுத்த பி.ஜே.பி.முயல்கிறது. ஆவணக் காப்பகங்களிலிருந்து வெளிவரும் ஒவ்வொரு ஆவணமும் அவர் மீது மோசமான ஒளியையே பாய்ச்சுகிறது"** என்ற முன்னுரையோடு 'சாவர்க்கரும் இந்துத்துவமும் - மகாத்மா காந்தியின் படுகொலையும்' என்ற நூல் 2002 ஆம் ஆண்டு வெளியானது. (தமிழில் பாரதி புத்தகாலயம் வெளியிட்டுள்ளது)

முரளிமனோகர் ஜோஷி அமைச்சராக இருந்தபோது தனது கட்டுப்பாட்டில் இருந்த ICHR அமைப்பின் மூலமாக வெளியிடப்பட்டு வந்த சுதந்திரப் போராட்ட நூல் வரிசை நூல்களை தடை செய்ததற்குக் காரணம், இது போன்ற உண்மைகள் வெளியில் வந்து விடக் கூடாது என்பதற்காகத் தான் என்றும் நூரானி எழுதினார். 1911 ஆம் ஆண்டும், 1913 ஆம் ஆண்டும் பிரிட்டிஷ் அரசுக்கு சாவர்க்கர் எழுதிய கடிதங்களை ஆவணக் காப்பகங்களில் இருந்து நூரானி எடுத்தார். பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு 1924 ஆம் ஆண்டு சாவர்க்கர் கொடுத்த உறுதிமொழியையும் எடுத்தார்.

'ஆர்.எஸ்.எஸ். - இந்தியாவிற்கு ஓர் அச்சுறுத்தல்' என்ற அவரது நூலை பிரண்ட்லைன் முன்னாள் ஆசிரியர் விஜயசங்கர் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். (824 பக்கங்கள், பாரதி புத்தகாலயம் வெளியீடு) ஆர்.எஸ்.எஸ். அமைப்பு தொடங்கப்பட்ட 1925 முதல் இன்று வரையிலான அந்த அமைப்பு குறித்த ஆய்வு நூல் இது. அந்த அமைப்பு மத நல்லிணக்கத்துக்கு மட்டுமல்ல, இந்திய ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தல் என்று அந்நூலில் நூரானி குறிப்பிட்டுள்ளார். அந்த அமைப்பு ஏன் உருவாக்கப்பட்டது, சுதந்திரம் பெற்ற நேரத்தில் எப்படி நடந்து கொண்டது, காந்தியார் படுகொலையின் போது தடை செய்யப்பட்டது... இன்ன பிற வரலாறுகளின் ஆதாரப்பூர்வத் தொகுப்பே இந்நூல்.

**இந்தியாவில் ஜனநாயக ஆட்சி முறைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு இருப்பதையும், இந்த தேசம் கட்டியமைக்க நினைத்த இந்தியாவுக்கே அபாயம் ஏற்பட்டிருப்பதையும் தொடர்ந்து சுட்டிக் காட்டி எழுதிய ஏ.ஜி. நூரானி, "இந்தியா தனது இதயத்தைக் காக்கும் போராட்டத்தை தொடர்ந்து நடத்தட்டும்" என்பதையும் சொல்லிச் சென்றிருக்கிறார். அதுதான் நடந்து கொண்டிருக்கிறது. அதை நடத்துவதே நூரானிக்கு செலுத்தும் அஞ்சலி.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 31.8.2024 அன்று அமெரிக்கா நாட்டின் சான்பிரான்சிஸ்கோவில், ஓமியம் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே எலக்ட்ரோலைசலர்கள் உற்பத்தி மற்றும் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தித் துறையில் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் புதிய தொழிற்சாலையை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்வில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண் ராய், , தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே. விஷ்ணு, ஓமியம் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் ஆன் பாலன்டைன், தலைமை தொழில்நுட்ப அலுவலர் சொக்கலிங்கம் கருப்பையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

## செங்கல்பட்டு மாவட்டத்தில் புதிய தொழிற்சாலை!

# ரூ.400 கோடியில் 500 பேருக்கு வேலைவாய்ப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்
## அமெரிக்கா – சான்பிரான்சிஸ்கோ நகரில் ஓமியம் நிறுவனத்துடன் ஒப்பந்தம்!

**சான்பிரான்சிஸ்கோ, செப். 2 - அமெரிக்கா நாட்டின் சான்பிரான் சிஸ்கோவில், ரூ.400 கோடி மதிப்பீட்டில் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ஓமியம் (Ohmium) நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (31.8.2024) அமெரிக்கா நாட்டின் சான்பிரான் சிஸ்கோவில், ஓமியம் நிறுவனத் துடன் எலக்ட்ரோலைசலர்கள் உற்பத்தி மற்றும் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தித் துறையில் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் புதிய தொழிற்சாலையை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டன.

தமிழ்நாடு உலகில் வேகமாக வளர்ந்துவரும் பொருளாதாரங்களில் ஒன்றாக விளங்குவதோடு, 39,000க்கும் மேலான தொழிற்சாலைகள், 2.6 மில்லியன் அளவிற்கு தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்கள், என இந்திய அளவில் முதலிடம் வகிக்கும் மாநிலமாகவும் தமிழ்நாடு விளங்குகிறது. சீரான மற்றும் பரவலான வளர்ச்சியை உறுதிப்படுத்தும் வகையில் பல்வேறு வளர்ச்சி மையங்கள் மாநிலம் முழுவதும் ஏற்படுத்தப்பட்டு, மனிதவளங்கள் மற்றும் திறன்களை முன்வைத்து வளர்ச்சியை மேற்கொண்டு வரும் மாநிலமாகவும் தமிழ்நாடு திகழ்கிறது.

இத்தகைய சிறப்புகளை கொண்ட தமிழ்நாட்டில், இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் நோக்கத்துடன் மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காகவும், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதலமைச்சர் அவர்கள் அமெரிக்காவிற்கு அரசு முறை பயணம் மேற்கொண்டு வருகிறார். இப்பயணத்தின் போது, சான்பிரான் சிஸ்கோவில் 29.8.2024 அன்று நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், உலகின் முன்னணி தொழில் நிறுவனங்களான நோக்கியா, பேபால், ஈல்ட்டு இன்ஜினியரிங் சிஸ்டம்ஸ், மைக்ரோசிப் டெக்னாலஜி, இன்பிங்ஸ் ஹெல்த்கேர் மற்றும் அப்ளைடு மெட்டீரியல்ஸ் ஆகிய 6 நிறுவனங்களுடன் 900 கோடி ரூபாய் முதலீட்டில் சென்னை, கோவை மற்றும் மதுரையில் 4,100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதனையடுத்து 30.8.2024 அன்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆப்பிள், கூகுள் மற்றும் மைக்ரோசாப்ட் நிறுவனங்களின் உயர் அலுவலர்களை சந்தித்து, தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்ததோடு, கூகுள் நிறுவனத்துடன் தமிழ்நாட்டில் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) ஆய்வகங்கள் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, 31.8.2024 அன்று சான்பிரான் சிஸ்கோவில், ஓமியம் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது. அதன் விவரம்:

ஓமியம் நிறுவனம், பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி, அளவிடக்கூடிய புரோட்டான் பரிமாற்ற சவ்வு (Proton Exchange Membrane) எலக்ட்ரோலைசர் அமைப்புகளை வடிவமைத்து, உற்பத்தி செய்கிறது. ஓமியம் நிறுவனமானது அமெரிக்கா, மெக்சிகோ, ஐரோப்பா மற்றும் ஆசியா முழுவதும் உலகளாவிய பசுமை ஹைட்ரஜன் திட்டக் குழாய்களை அமைத்துள்ளது.

**ஓமியம் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் ஓமியம் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே எலக்ட்ரோலைசலர்கள் உற்பத்தி மற்றும் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தித் துறையில் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் புதிய தொழிற்சாலையை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே. விஷ்ணு, ஓமியம் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் ஆன் பாலன்டைன், தலைமை தொழில்நுட்ப அலுவலர் சொக்கலிங்கம் கருப்பையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

## சான்பிரான்சிஸ்கோவில்

# மற்றொரு வெற்றிகரமான நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சான்பிரான்சிஸ்கோ, செப். 2 -

அமெரிக்காவில் முதலீடுகளை ஈர்க்க பயணம் மேற்கொண்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், சான்பிரான்சிஸ்கோ நகரில் மற்றொரு வெற்றிகரமான நாள் என்று குறிப்பிட்டுள்ளார்.

சான்பிரான்சிஸ்கோவில் ஓமியம் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**சான் பிரான்சிஸ்கோவில் மற்றொரு வெற்றிகரமான நாள்!**

**செங்கல்பட்டு மாவட்டத்தில் ஓமியம் நிறுவனத்தின் மூலம் 400 கோடி ரூபாய் முதலீட்டைப் பெற்றுள்ளதோடு, 500 நபர்களுக்கு வேலை வாய்ப்புகளையும் உருவாக்கியுள்ளோம்.**

**இது பசுமை எரிசக்தி உற்பத்திக்கான சூழலமைப்பை வளர்த்தெடுப்பதிலும், வளங்குன்றா எதிர்காலத்துக்கான பங்களிப்பிலும் குறிப்பிடத்தக்க நகர்வாக அமைந்துள்ளது.**

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு கோடை விழாவினை பொதுப்பணித்துறை நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் துவக்கி வைத்தனர். இதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை, எம்.எஸ்.தரணிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் தெ.பாஸ்கர பாண்டியன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.